ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: **dcommunications@cbsl.lk, communications@cbsl.lk**
வெப்தளம்: **www.cbsl.gov.lk**

# பத்திரிகை வெளியீடு

**வெளியிடுபவர்** வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
**திகதி** 2017.06.30

**தாக்குப்பிடிக்கும் தன்மையை வலுப்படுத்துவதற்காக உரிமம்பெற்ற வங்கிகள் பாசல் III மூலதன நியமங்களைப் பின்பற்றுகின்றன.**

2017 யூலை 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வங்கிகள் 2016இன் பிற்பகுதியில் இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட பணிப்புரையினை அடிப்படையாகக் கொண்ட குறைந்தபட்ச மூலதன நியமங்களைப் பின்பற்றும். இப்பணிப்புரையானது வங்கிகளின் தாக்குப்பிடிக்கும் தன்மையை வலுப்படுத்தும் நோக்கில் பன்னாட்டுத் தீர்ப்பனவுகளுக்கான வங்கியினால் விடுக்கப்பட்ட மூலதனம், முடுக்கி மற்றும் திரவத்தன்மை தொடர்பான பாசல் III வழிகாட்டல்களுடன் இசைந்ததாகக் காணப்பட்டது.

**வங்கிகளின் மூலதனத்தின் அளவினையும் தரத்தினையும் உயர்த்துதல்**

பாசல் III மூலதன நியமங்கள் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டிற்கு மேலதிகமாக பின்வரும் விதத்தில் மூலதன தாங்கியிருப்புக்களை அறிமுகப்படுத்துவதனூடாக வங்கிகளின் மூலதனத்தின் அளவினையும் தரத்தினையும் உயர்த்துவதற்கு முயற்சிக்கின்றது:

* அழுத்தமான சூழ்நிலையொன்றில் பயன்படுத்துவதற்காக சாதகமான காலப்பகுதியில் கட்டியெழுப்பத் தேவைப்படுத்தப்பட்ட மூலதனப் பாதுகாப்பு தாங்கிருப்பு
* நிதியியல் முறைமையில் மிகையான கொடுகடன் வளர்ச்சி மற்றும் சொத்துக் குமிழ்களைக் கட்டுப்படுத்துவதற்காக எதிர் சூழல் மூலதன தாங்கிருப்பு
* முறையியல் ரீதியான இடர்நேர்வுகளைத் தவிர்ப்பதற்காக முறையியல் ரீதியில் முக்கியத்துவமிக்க வங்கிகளுக்கான மூலதன தாங்கிருப்பு

**2019 சனவரி 01 இலிருந்து உயர் மூலதனத் தேவைப்பாடு**

2019 சனவரி 01இற்கு முன்னர் முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான சர்வதேச கால அட்டவணையுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கெதிரான பாசல் III குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டை பின்வருமாறு படிப்படியான அடிப்படையில் உரிமம்பெற்ற வங்கிகள் பூர்த்தி செய்யும்.

* ரூ.500 பில்லியன் அல்லது அதற்கு அதிகமான சொத்துக்களுடன் வங்கித்தொழில் துறை சொத்துக்களின் 71% இற்கு வகைகூறும் உள்நாட்டு முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளாக அடையாளம் காணப்பட்ட 6 உரிமம்பெற்ற வங்கிகளும் 2019 சனவரி 01 இற்கு முன்னர் அவற்றின் மூலதனத்தை தற்போதுள்ள 10% இலிருந்து 14% இற்கு அதிகரிக்க வேண்டும்.
* ரூ.500 பில்லியனுக்கும் குறைவான சொத்துக்களைக் கொண்ட ஏனைய அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் தற்போதுள்ள 10% இலிருந்து 12.5% இற்கு அதிகரிக்க வேண்டும்.

**நடைமுறைப்படுத்தல் மற்றும் வங்கித்தொழில் துறையின் ஆயத்தநிலை**

2015 இல், பாசல் III திரவத்தன்மை நியமங்களின் கீழ் விடுக்கப்பட்ட வங்கித்தொழிற் சட்டம் பணிப்புரையின் நியதிகளில் திரவத்தன்மை உள்ளடக்க விகிதத்தை வங்கிகள் நடைமுறைப்படுத்தின.

பாசல் III இன் கீழான கடுமையான விதிகளுடன் வங்கிகள் இணங்கியொழுகுவதை இயலச்செய்யும் விதத்தில் வங்கிகளின் மூலதன திட்டமிடல் செயன்முறைகள் மேலும் வலுப்படுத்தப்பட்டன.

* இலங்கையிலுள்ள பாரியளவிலான அரச வங்கிகள் மற்றும் தனியார் துறை வங்கிகள் புதிய மூலதனத்தை உட்புகுத்தல் மற்றும் இலாபங்களைப் பிடித்து வைத்திருத்தல் என்பனவற்றினூடாக மூலதனத்தை அதிகரிக்கின்றன.
* சிறியளவிலான அரசிற்குச் சொந்தமான வங்கிகள் அவற்றின் மூலதன நிலைமையை மேலும் வலுப்படுத்துவதற்காகவும் அவற்றின் ஐந்தொகைகளை வளர்ச்சியடையச் செய்வதற்காகவும் ஒன்று சேர்க்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.
* இலங்கை மத்திய வங்கியானது மூலதன நிலைமை, இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் நடுத்தர காலப்பகுதியில் வியாபார விரிவாக்கம் போன்றவற்றைப் பிரதிபலிக்கும் வங்கிகளினால் தொகுக்கப்பட்ட உள்ளக மூலதனப்போதுமை மதிப்பீடுகளை மதிப்பாய்வு செய்வதுடன் வங்கிகளில் பாசல் III நியமங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதைத் தொடர்ந்தும் கண்காணிக்கும்.
* இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வங்கிகள் 2017 யூலை 01 இன் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யுமென்பதுடன் முன்னோக்கிச் செல்கையில் அவற்றின் மூலதனத்தை மேலும் வலுப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. இது குறைவான இடர்நேர்வுக் கட்டணத்துடன் விரிவாக்கத்திற்கான நிதியைக் கவர்வதற்கு வங்கித்தொழில் துறையின் இயலுமையை அதிகரிக்கச் செய்யும் எனவும் இதன் மூலம் இலங்கையின் பொருளாதாரம் நன்மையடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**முன்னோக்கிய பார்வை**

இலங்கை மத்திய வங்கி சர்வதேச கால அட்டவணையுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் பாசல் III: முடுக்கி விகிதம் மற்றும் தேறிய உறுதியான நிதியிடல் விகித நியமங்கள் தொடர்பான வழிகாட்டல்களை வங்கிகளுக்கு விடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளது.